**NEW SYLLABUS**

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**
**MODEL EXAMINATION PAPER**

**SEMINAR 1**

**கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தர) ப் பரீட்சை**
**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය**
**General Certificate of Education (Adv. Level) Examination**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரசியல் விஞ்ஞானம் I<br>දේශපාලන විද්‍යාව I<br>Political Science I | 23 | T | I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>Two hour |

P.T.M. AMEEN BA( Pera), PGDE ( Merit ), SLTS Contact No: 0772273916

**அறிவுறுத்தல்கள் :**

- இவ்வினாத்தாள் A, B ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும்.
- எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி A - 5 கூறறுக்களை உளள்டக்கிய 30 பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாகும்.
- ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 30 வினாகக்ளுக்கும் 60 புள்ளிகள் வழங்கப்படும்.
- பகுதி B - குறு விடைகளை வழங்க் வேண்டிய 20 வினாக்களைக் கொண்டதாகும்.
- ஒரு வினாவுகக் 02 புள்ளிகள் வீதம் 20 வினாக்களுக்கு 40 புள்ளிகள் வழஙகப்படும்.
- பகுதி I க்கான மொத்தப் புள்ளி 100 ஆகும்.

- **1 தொடக்கம் 20 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

01. அரசறிவியல் என்பது

1. சமூக வாழ்க்கையின் பிரதான அங்கமான அரசியலை பயிலும் துறையாகும்.
2. தேசத்தை ஆட்சி செய்தல் என பொதுவாக அழைக்கப்படும்.
3. அரசுக்கு வெளியில் பிரசைகள் பங்குபற்றும் சமூக பயன்பாடாகும்.
4. அரசு மற்றும் அதிகாரத்தோடு தொடர்புடையதாக ஆரம்பகாலத்தில் குறிப்பிடப்பட்டது.
5. நகர அரசு என பொருள் படும்.

02. அரசியல் என்பது

1. அரசியல் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளைக் கற்றல்.
2. அரசு, அரசாங்கம் மற்றும் அரச நிருவாகம் போன்ற துறைகளுக்குள் மட்டுப்படுத்தப்படாமல் அதற்கு வெளியில் சமூக பிரசைகளுக்குகிடையில் காணப்படும் நடைமுறையாகும்.
3. அரசியலை கல்வித்துறையாகக் கற்றல்
4. தோற்றப்பாடு ஒன்றை கோட்பாட்டுக்கமைய பெற்றுக்கொண்ட தகவல்களை மற்றும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கற்கும் முறையாகும்.
5. அரசியல் தோற்றப்பாட்டின் பல்வேறு பிரிவுகளை விளங்கிக் கொள்ளுஞ் செயன்முறையாகும்.

03. தத்துவார்த்த அணுகுமுறை என்பது

1. இங்கு பயன்படுத்தப்படும் எண்ணக்கருக்களின் விளக்கங்களை ஆழமாக ஆய்வு செய்யும்.
2. அரசு என்பது அடிப்படை சமூக உரிமையாகும் எனக் குறிப்பிடுகிறது.
3. அரசின் கீழ் வாழும் மனிதர்களின் மனப்பாங்கு மற்றும் தனியுரிமையினை அரசியற் சூழலில் கற்பதற்கு உதவுகிறது.
4. மனிதனின் அரசியல் பொருளாதார வாழ்வினை புரிந்துகொண்டு தொடர்புபடுகிறது.
5. பாரம்பரிய தத்வத்துக்கமைய பெண்விடுதலையையும் இணைத்துள்ளது.

P.T.M. Ameen

04. அரசியல் கட்சி என்பது

1. ஜனநாயக அரசியலில் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாகும்.
2. நீண்டகால வரலாற்றைக் கொண்டிருக்கும்
3. குழுவாக இணைந்து சட்டம், அரசகொள்கை மற்றும் அரச தீர்மானங்ககளுக்கு அழுத்தம் கொடுக்கும் பிரசைகளின் குழுவாகும்.
4. தமது அங்கத்தவர்களின் அபிலாசைகளை அடைந்துகொள்ள செயற்படும் ஒழுங்கமைப்பாகும்.
5. மேற்கத்தேய நாடுகளிலும் இலங்கையிலும் சங்கங்களாக காணப்படும்.

05. அமுக்கக் குழு என்பது

1. இதன் தோற்றத்திற்கு பிரதிநிதித்துவமும் வாக்குரிமையும் பிரதான காரணமாக இருந்தன.
2. தேர்தல் அல்லது வேறு ஊடகத்தின் ஊடாக அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும்.
3. இது அமெரிக்காவில் ஆசைக்குழு அல்லது நியாயப் பிரச்சாரக் குழு என அழைக்கப்படுகிறது.
4. அரசில் பிரதிநிதித்துவம் பெறும்
5. அங்கத்துவ அட்டைகளைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும்

06. அரசு என்பது

1. அரசின் இறைமை அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாகும்.
2. குறுகிய காலத்துக்கு அதிகாரம் பெற்றுக்கொடுக்கப்பட்ட நிறுவனமாகும்.
3. அரச அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் பிரதான முகவராவர்.
4. காலத்துக்கு காலம் மாறக்கூடியது.
5. ஒரு சமூக நிறுவனமாவதோடு மனிதர்களின் உயர்வான பொதுநலனுக்காக செயற்படுகிறது.

07. சிவில் சமூகம் என்பது.

1. இது உயர் குழாம் பகுதியினரை அடிப்படையாகக் கொண்டிருக்கும்
2. முதலாளித்துவ சமூகத்துக்கு சார்பாக பயன்படுத்தப்பட்டது.
3. தனிப்பட்ட தமது நோக்கங்களுக்காக ஒன்றிணைந்த அமைப்பாகும்
4. அரசாங்கத்தின் செயற்பாடுளை ஒழுங்கமைக்கும்.
5. அரசுக்கு வெளியில் சுயாதீனமான பிரசைகள் தமது பொது நோக்கங்களுக்காக ஒன்றிணைந்து செயற்படும் சமூக வாய்ப்பாகும்.

08. பிரசை என்பவர்

1. பிரசை என்பது தற்போது அரசின் உறுப்பினன் என்று அர்த்தப்படுத்தப்படுகின்றது.
2. அரிஸ்டோட்டிலின் கருத்துப்படி பிரசை என்பவர் அரசின் செயற்பாடுகளில் மறைமுகமாக பங்குபற்றபவர்.
3. பிரசைகள் அரசுக்கு அடிபணிய வேண்டிய அவசியம் இல்லை.
4. பிரசைகளின் இயற்கை உரிமைகளை அரசு பாதுகாக்காமையால் அரசுக்கு பிரசை கட்டுப்பட்ட வேண்டிய அவரியமில்லை.
5. பிரசைகள் தீர்மானம் எடுப்பதற்கு மக்கள் பிரதிநிதியுடன் தொடர்படுவதில்லை.

PTM. Ameen

09. சமூக ஒப்பந்தக் கோட்பாடு என்பது

1. கிரேக்க காலத்தில் தோற்றம் பெற்றது.
2. இக் கோட்பாட்டை கொப்ஸ், லொக், ரூஸோ போன்றோர் முன்வைத்தனர்.
3. சமூகத்தினுள் ஏற்பட்ட மோதலின் விளைவாக தோற்றம்பெற்ற கோட்பாடாகும்.
4. தெய்வீக உரிமைக் கோட்பாடு உயர்நிலையை அடைந்திருந்த சந்தர்ப்பத்தில் உருவானது.
5. மக்களின் இணக்கம் கருத்திற்கொள்ளப்படாமல் ஆட்சியதிகாரம் ஒப்படைக்கப்படுகிறது

10. ஒற்றையாட்சி அரசியலமைப்பின் பண்புகளில் ஒன்று

1. மத்திய மற்றும் பிராந்திய அரசுகள் காணப்படும்.
2. விஷேட நிலைமைகளில் வேண்டுமென்றே உருவாக்கப்பட்டதாகும்
3. இறைமை அதிகாரம் முழுவதும் மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும்.
4. இதன் ஐக்கியத் தன்மை மற்றும் பிரதேச பல்வகைத்தன்மைகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டது.
5. பேரம் பேசுதலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் அரசியலமைப்பாகும்.

11. சமஷ்டி அரசியலமைப்பு என்பது

1. அரசின் இறைமை அதிகாரம் தனியொரு தேசிய நிறுவனத்திடம் வழங்கப்பட்டிருக்கும்.
2. மத்திய அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள நிறுவன செயற்பாடுகளினூடாக கீழ் நிலை நிறுவனங்களை இல்லாதொழிக்கும் அதிகாரம் காணப்படும்.
3. மத்திய சட்டத்துறையின் உயர் தன்மை வெளிப்படும் வகையில் சட்டத்துறை ஓரங்கவாத அடிப்படையில் காணப்படும்.
4. மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுக்கும் தனித்துவமான விடயங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கும்.
5. இது எளிமையானதும் வினைத்திறன் மிக்கதுமான அரசியலமைப்பாகும்.

12. பாராளுமன்ற முறை என்பது

1. நிறைவேற்றுத் துறை சட்டத்துறைக்கு பொறுப்புச் சொல்லமாட்டாது.
2. அமைச்சரவை ஜனாதிபதிக்கு பொறுப்புச் சொல்லும் வெறும் ஆலோசனை சபையாகும்.
3. பிரதமர் மற்றும் அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு கூட்டாக பொறுப்புச் சொல்ல வேண்டும்.
4. அரச தலைவரினது வகிபங்கும் அரசாங்த்தினது தலைவரினது வகிபங்கும் ஒன்று சேர்ந்து காணப்படும் முறையாகும்.
5. சட்டதுறை உறுப்பினர் அமைச்சரவையில் நியமிக்கப்பட்டால் அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்.

13. தாராண்மை வாதம் என்பது

1. அரசாட்சியின் தான்தோன்றித்தனமான தலையீடுகளிலிருந்து சுதந்திரம் தேவை என்கிறது.
2. முதலாளித்துவத்திற்கு எதிரான ஒன்றாகும்.
3. தொழிலாளர் வகுப்பின் சுரண்டல் பற்றிப் பேசுகிறது.
4. பால்நிலையை அடிப்படையாகக் கொண்டது.
5. சமய அடிப்படை வாதத்ததை துணையாகக் கொண்டது.

PT M. Ameen

14. தேசியவாதம் என்பது

1. சுதந்திர் பொருளாதாரமும் சுதந்திர சந்தையும் அரசின் பிரதான சிந்தனையாகும்.
2. அரசு என்பது முழு இனத்தினதும் உயர்வு, கௌரவம் மற்றும் விதிகளின் வெளிப்பாடாகும்.
3. ஒரு சமூகத்தில் தாம் அனைவரும் ஒரு இனம் என்ற உணர்வினைக் கட்டியெழுப்புகிறது.
4. இதன் பிரதான சிந்தனையாளர் கால் மாக்ஸ் ஆவார்
5. பெண்கள் உரிமைகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் ஒரு கருத்தியலாகும்.

15. முரண்பாடு என்பது

1. எதிர்வாதம் , போட்டி, பிரச்சினை என்ற சொற்காளால் அழைக்கப்படுகிறது.
2. சமூக வரலாற்றின் முன்னோக்கிய பயணத்தில் உந்து சக்தியாக அமைவது வர்க்க முரண்பாடாகும் என மாக்ஸ் கூறினார்.
3. இன முரண்பாடுகள் ஏற்படுவது முரண்பாட்டின் சதகமான பக்கமாக கருதலாம்.
4. ஒருவரது உள்ளத்தில் ஏற்படுகின்ற முரண்பாடு ஆளிடை முரண்பாடாகும்.
5. அரசியல் அதிகாரம் உள்நாட்டு முரண்பாட்டுக்கு பிரதான காரணமாக அமையாது.

16. காலனித்துவ அரசு என்பது

1. குடியேற்றவாத நாடு மற்றும் காலனித்துவம் என்பவற்றுக்கிடையில் காணப்படும் தொடர்பை தெளிவுபடுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட ஒரு எண்ணக்கருவாகும்.
2. காலனித்துவ சமூகத்தின் அபிலாசைகளை அரசு பிரதிநிதித்துவப்படுத்தும்.
3. இலங்கையில் இதன் மூலம் இராஜகாரிய முறை கொண்டுவரப்பட்டது.
4. தாய் நாட்டின் இறைமைக்கு மாற்றமாக புதிய தேசத்தை நடாத்துவதாகும்.
5. காலனித்துவ அரசு பொருளாதார, சமூக மற்றும் அரசியல் கட்டமைப்புக்களை தமக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ள முடியாது.

17. 1833 கோல்புறுக் கமரன் ஆணைக்குழுவின் சிபாரிசுகளில் ஒன்று

1. இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டது.
2. செனட்சபை
3. மகாதேசாதிபதி
4. சர்வசன வாக்குரிமை
5. தேர்தல் முறை

18. 1910 குறு மக்கலம் சீர்திருத்தத்தின் சிபாரிசுகளில் ஒன்று

1. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டது.
2. இலங்கை முழுவதும் ஓரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.
3. தேசாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டது.
4. ஆங்கிலக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.
5. கிராமிய சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

19. 1931 டொனமூர் குழுவின் அரசாங்க சபை தொடர்பான விடயங்களில் ஒன்று

1. இதன் பதவிக் காலம் 3 வருடங்களாகும்
2. இது சட்டம் நிர்வாகம் ஆகிய இரண்டின் கடமைகளையும் நிறைவேற்றக்கூடியது.
3. அரசாங்க சபையானது 57 உறுப்பினர்களைக் கொண்டது.
4. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க 3 பேர் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.
5. அரசாங்க சபையின் முதலாவது சபாநாயகர் பிரட்றிக் நோர்த் ஆவார்.

PTM. Ameen

20. 1947 சோல்பரி யாப்பின் கீழ் மகாதேசாதிபதி
   1. பிரதம மந்திரியால் நியமிக்கப்பட்டார்.
   2. ஆறுவருடகாலம் பதவி வகித்தனர்
   3. இரண்டாம் மன்றினை கலைக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தனர்.
   4. பிரித்தானிய முடியினால் நியமிகக்ப்பட்டார்.
   5. அரசாங்க சபைக்கு தலைவராவார்.

**21 தொடகக்ம் 25 வரையிலான வினாகக்ளில் தரப்பட்டுள்ள கூறறுகளில சரியான கூறறினை அலல்து கூற்றுக்களின் தொகுதியைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.**

21. சோல்பரி யாப்பின் கீழ் இருந்த மந்திரி சபை
   A. வெஸ்ட்மினிஸ்டர் மாதிரியில் வடிவமைக்கப்பட்டிருந்தது.
   B. கீழ்சபை உறுப்பினர்களை மாத்திரம் கொண்டிருந்தது
   C. கூட்டுப்பொறுப்புக் கொள்கையை பின்பற்ற வேண்டும் என எதிர்பார்கக்ப்பட்டது
   D. அரசாங்கத்தின் உண்மையான நிர்வாகமாக இருந்தது.
   E. இதன் தலைவராக பிரதம மந்திரி காணப்பட்டார்.
   1. ABCD  2. BCDE  3. ABDE  4. ACDE  5. ABCE

22. 1972 இன் முதலாவது குடியரசு யாப்பின் கீழ்
   A. தேசிய அரசுப்பேரவை அரசின் மீயுயர் கருவியாக ஆக்கப்பட்டது.
   B. முதன்முறையாக அடிப்படை உரிமைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
   C. ஒரு அரசியல் அமைப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.
   D. பொதுச்சேவை உத்தியோகர்த்தகர்களின் ஆட்சேர்பப்பு இடமாற்றம் ஒழுங்கு நடவடிக்கை என்பவற்றிக்கு ஒரு அமைச்சு பொறுப்பாக்கப்பட்டது.
   E. இங்கு அரசின் தலைவர் தேசாதிபதியாவார்.
   1. ABCD  2. BCDE  3. ABDE  4. ACDE  5. ABCE

23. இலங்கையினை ஒரு குடியரசாக ஆக்கியதன் விளைவாக என்ன மாற்றங்கள் ஏற்பட்டன.
   A. இலங்கை பொதுநலவாய நாடுகளின் அமைப்பில் அங்கத்துவம் பெற்றது.
   B. பிரித்தானிய முடியின் பிரதிநிதியாக மகாதேசாதிபதி இலங்கையில் அரசின் தலைவராக ஏற்றுக்கொளள்ப்பட்டார்.
   C. இலங்கை ஒரு முடியாட்சி என்ற சட்ட அந்தஸ்த்து நீக்கப்பட்டது.
   D. பிரதம மந்திரியினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி அரசின் தலைவராவார்.
   E. அமைச்சரவையின் தலைவராக பிரதம மந்திரி விளங்கினார்.
   1. ABCD  2. BCDE  3. ABDE  4. ACDE  5. ABCE

24. அரச கொள்கைகள்,
   A. அரசாங்கங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் தோல்வியுற்றமையின் காரணமாக ஒரு பாடமாகக் கற்கப்படுதல் ஆரம்பமாகியது.
   B. வகுக்கப்படுதல் அரசறிவியலாளர்களின் பணியாக இருப்பதோடு நடைமுறைப்படுத்தப்படுதல் நிர்வாகிகளின் பணியாகும்.
   C. நடைமுறைப்படுத்தப்படும் போது அரசியல்வாதிகளினதும் பொதுமக்களினதும் பாதிப்புக்களிலிருந்து சுயாதீனமானதாக இருத்தல் வேண்டும் எனக் கூறுகிறது.
   D. அரசாங்கங்கள் மாறும் போது மாற்றமுற முடியும்.
   E. இது ஒரு கற்கைத் துறையாக அமெரிக்கா கருத்துப் பள்ளியின் ஊடாக ஆரம்பமானது.
   1. ABCD  2. BCDE  3. ABDE  4. ACDE  5. ABCE

PTM. Ameen

25. ஜனநாய அரசாங்க முறையின் பண்புகள்

A. ஆட்சி முறை மட்டுமன்றி அது ஒரு வாழ்வியல் எண்ணக்கருவாகும்.
B. மக்கள் விருப்பப்படி மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஆட்சி முறையாகும்
C. நீண்டகால வரலாற்றைக் கொண்ட நடைமுறையில் செயற்படுத்தப்பட்டு வரும் ஜனநாயகம் பிரதிநிதித்துவ ஜனநாயகமாகும்.
D. அரச பதவி வகிப்போர் மக்களுக்கு பதில் கூற வேண்டியது அவசியமாகும்.
E. சுதந்திரமான நீதியான தேர்தல் என்பது ஜனநாயக முறையில் முக்கியமானதாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ACBE

**26 தொடக்கம் 30 வரையிலான ஒவவொரு வினா தொடர்பாகவும் இரு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன ஒவ்வொரு வினாவுக்குமுரிய சோடிக் கூற்றுக்குப் பின்வரும் அட்டவணை 1 இற்கான வழிகாட்டியிலுள்ள 1, 2, 3, 4, 5 என்பவற்றுள் எந்த இலக்கம் அதிகம் பொருந்துகிறது என்பதைத் தெரிவுசெய்து அதனிலக்கத்தை அடைப்புக்குறிக்கு உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

**அடட்வணை 1 இறக்ான வழிகாடடி**

| இலக்கம் | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 1 | உண்மை | உண்மை |
| 2 | உண்மை | பொய் |
| 3 | பொய் | உண்மை |
| 4 | பொய் | பொய் |
| 5 | உண்மை | உண்மையாக இருப்பதோடு முதல் கூற்றை மேலும் விபரிக்கிறது. |

அட்டவணை1

| | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 26 | 1978 ஆம் அரசியல் அமைப்பு ஜனாதிபதி ஆட்சி முறையன் பண்புகளையும் பாராளுமான்ற ஆட்சி முறையின் பண்புகளையும் கொண்டுள்ளது. | எனவேதான இவ்வரசியல் அமைப்பு முறையின் அரசியல் நிறைவேற்றுத் துறை இரட்டை நிறைவேற்றுத் துறையைக் கொண்டுள்ளது |
| 27 | இரண்டாம் குடியரசின் சட்டவாக்கத்துறை தேசிய அரசுப்பேரவை எனப்படுகிறது. | இது 225 பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது. |
| 28 | 13எவது திருத்தத்தின் மூலம் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு சட்டபூர்வமான விடயங்கள் ஒப்படைக்கப்பட்டன. | 13 வது திருத்த முறை மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளும் முறையாகும். |
| 29 | 17 ஆம் திருத்தில் இரட்டை குடியுரிமை பெற்ற ஒரு இலங்கை பிரஜைக்கு பாராளுமன்ற உறுப்புரிமை பெற முடியாது. | 17 ஆம் திருத்தத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆகக் காணப்படும். |
| 30 | 19 ஆம் திருத்ததின் படி ஜனாதிபதி பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடரிலிருந்து 4 ஆண்டுகள் முடியும் வரை கலைக்க முடியாது | 19 திருத்தத்தின் படி ஜனாதிபதி தற்றுணிவு அதிகாரம் பணிகளின் போது பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும் |

PTM. Ameen

## பகுதி B

31. பிரஜைகள் "செயற்பாட்டுப் பிரசை" என்ற கருத்து இடம்பெறும் நூலையும் அதன் ஆசிரியரை எழுதுக.
I……………………………………………………………………………………………………
II…………………………………………………………………………………………………

32. சகல சமூகங்களிலும் அடிப்படையானதும் மையமானதுமான அரசியல் நிறுவனங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
1……………………………………………………………………………………………………
II……………………………………………………………………………………………………

33. " அரசு சொத்துடையவர்களின் கருவி "
" சமூகத்தில் ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவு" போன்ற கருத்துகக்ளுக்கு உரித்துடைய கோட்பாடுகள் எவை?
I……………………………………………………………………………………………………
II……………………………………………………………………………………………………

34. முரண்பாட்டின் செயற்பாடுகள் தொடர்பில் காணப்படும் பிரதான இரண்டு அணுகுமுறைகளும் எவை?
I……………………………………………………………………………………………………
II……………………………………………………………………………………………………

35. இலங்கையில் காலனித்துவ நிலைமாற்றங்களில் நிர்ணயமான முறையில் பாதிப்புச் செலுத்திய அரசியல் சீர்திருத்தங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
I……………………………………………………………………………………………………
II……………………………………………………………………………………………………

36. 1931 டொனமூர் யாப்பின்
I. சட்டவாக்க கழகத்தின் பெயர் என்ன? ……………………………………………………………
IIஅதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது? ……………………………………………………

37. சோல்பரி அரசாங்க முறையின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறையானது மேல் மற்றும் கீழ் என்ற இரு மன்றங்களைக் கொண்டிருந்தது. அவற்றுள்
I மேல் மன்றம் என அழைக்கப்பட்டது எது? ……………………………………………………
II கீழ் மன்றம் என அழைக்கப்பட்டது எது? ……………………………………………………

38. I. 1972 முதலாம் குடியரசு யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட நாம நிறைவேற்றாளர் பதவியின் உத்தியோக ரீதியான பெயர் யாது? ……………………………………………………………
II. 1972 முதலம் குடியரசு யாப்பின் கீழ் இருந்த நாம நிறைவேற்றாளரின் பதவிக் காலம் யாது? ……………………………………………………………………………………

39. நவீன அரசுகளில் பயன்படுத்தப்படும் நேரடி ஜனநாயக உத்திகள் 2 ஐக் குறிப்பிடுக
I……………………………………………………………………………………………………
II……………………………………………………………………………………………………

40. சுவிட்சர்லாந்து சமஷ்டி முறை ஏனைய நாடுகளின் சமஷ்டியிலிருந்து வேறுபடுவிதமாக காணப்படுகின்ற பிரதான தாபனங்கில் 2 ஐக் குறிப்பிடுக.
I……………………………………………………………………………………………………
II……………………………………………………………………………………………………

PTM. Ameen

41. மெக்ஸ் வெபரின் சமூக முறைகளில் காணப்படும் அதிகார முறைமைகளில் 2 ஐக் குறிப்பிடுக.
I…………………………………………………………………………………………………
II…………………………………………………………………………………………………

42. I. 1978 ஆண்டு யாப்பில் அடிப்படை உரிமைகளைப பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட பதவி யாது? ………………………………………………………………………………………..
II. அப்பதவிக்குரியவரை நியமனம் செய்பவர் யார்? ……………………………………………..

43. 19ஆம் அரசியல் யாப்புத் திருத்தத்தின் கீழ், I. அரசாங்கத்தின் உயர் பதவிகளுக்கு ஆட்களை நியமிப்பதற்காக ஜனாதிபதிக்கு அவதானிப்புகளை வழங்குவதற்குத் தாபிக்கப்பட்டிருந்த பேரவையின் உத்தியோகபூர்வப் பெயர் யாது?
……………………………………………………………………………………………………
II.அப்பேரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது? ……………………………………………

44. இலங்கையில் பொதுவுடைமையை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற கட்சிகள் இரண்டைக் குறிப்பிடுக.
I…………………………………………………………………………………………………
II…………………………………………………………………………………………………

45. சர்வதேச அரசியலில் காணப்படும் பிரதான இரண்டு செயற்பாட்டாளர்கள் யாவர்.
I…………………………………………………………………………………………………
II…………………………………………………………………………………………………

46. சர்வதேச அரசியலில் ஏற்படும் அராஜக முறைகளை குறைத்துக்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
I…………………………………………………………………………………………………
II…………………………………………………………………………………………………

47. சமகால சர்வதேச அரசியலின் பிரதான போக்குகள் இரண்டைக் குறிப்பிடுக
I…………………………………………………………………………………………………
II…………………………………………………………………………………………………

48. நவீன அரசுகள் வெளிநாட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் விதங்கள் இரண்டை எழுதுக.
I…………………………………………………………………………………………………
II…………………………………………………………………………………………………

49. இலங்கையின் வெளிவுறவுக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டை எழுதுக.
I…………………………………………………………………………………………………
II…………………………………………………………………………………………………

50. சார்க் அமைப்புடன் இலங்கை தொடர்பு படும் ஒப்பந்தங்கள் இரண்டைக் குறிப்பிடுக
I…………………………………………………………………………………………………
II…………………………………………………………………………………………………

PTM. Ameen

MODEL EXAMINATION MODEL EXAMINATION MODEL EXAMINATION MODEL EXAMINATION MODEL EXAM

**NEW SYLLABUS**

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்
MODEL EXAMINATION PAPER

**MODEL**

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தர) ப் பரீட்சை
අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය
General Certificate of Education (Adv. Level) Examination

| | | | | |
|---|---|---|---|---|
| அரசியல் விஞ்ஞானம் II<br>දේශපාලන විද්‍යාව II<br>Political Science II | 23 | T | II | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

P.T.M. AMEEN BA( Pera), PGDE ( Merit ), SLTS Contact No: 0772273916

**அறிவுறுத்தல்கள் :**

- இவ் வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.
- ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் மொத்தப்புள்ளிகள் 100.
- பகுதி I - கட்டுரை, அரைக்கட்டமைப்பு முறையிலான மூன்று வினாக்களைக் கொண்டதாகும் குறைந்தபட்சம் ஒரு வினாவுக்கேனும் விடையளித்தல் வேண்டும்
- பகுதி II - கட்டுரை, அரைக்கட்டமைப்பு முறையிலான மூன்று வினாக்களைக் கொண்டதாகும் குறைந்தபட்சம் இரண்டு வினாக்களுக்கேனும் விடையளிதத்ல் வேண்டும்
- பகுதி III - கட்டுரை, அரைக்கட்டமைப்பு முறையிலான மூன்று வினாக்னளைக் கொணட்தாகும் குறைந்தபட்சம் ஒரு வினாவுக்கேனும் விடையளிதத்ல் வேண்டும்
- **எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**
- வினாத்தாள் II இற்கான மொத்தப்புள்ளிகள் 100 ஆகும்.
- **இறுதிப் புள்ளியைக் கணித்தல் ( வினாத்தாள் I = 100 வினாத்தாள் II = 100**
  **இறுதிப் புள்ளி = 200 ÷ 2 = 100**

## பகுதி I

01. கோட்பாட்டரசியலுக்கும் பிரயோக அரசியலுக்கும் இடையிலான வேறுபாடுகளை ஆராயக.

02. அரசியல் விஞ்ஞானத்துக்கான பின்வரும் அணுகுமுறைகளில் எவையேனும் இரண்டினை விபரிக்குக.

    I. அரசியல் பொருளாதார அணுகுமுறை
    II. ஒப்பீட்டு அணுகுமுறை
    III. பெண்ணிலைவாத அணுகுமுறை

03. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டினை ஆராய்க.

    I. அரசியல் கட்சிகள்
    II. சிவில் சமூகம்
    III. நவீன ஆள்புல அரசு
    IV. கோத்திர அரசு

PTM.Ameen

## பகுதி II

04. இலங்கையின் காலனித்துவ மாற்றங்கள் தொடர்பாக பின்வருவனவற்றில் இரண்டை விளக்குக.

i. பொருளாதார மாற்றம்
ii. காலனித்துவ சமூக நிலை மாற்றம்
iii. 1833 கோல்புறுக் கமரன் சீர்திருத்தம் நவீன அரசுக்கு தளமிடல்

05. 1931 டொனமூர் சீத்திருத்தத்தில் அரசக்கழத்தின் சட்டவாக்க அதிகாரங்களை விளக்குக.

06. 1947 சோல்பரி யாப்பில் சிறுபான்மைக் காப்பீடுகளை விளக்குக.

07. 1978 அரசியல் யாப்பின் கீழ் பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டினை ஆராய்க.

I. 18ஆம் 19 ஆம் திருத்தத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்கள்
II. ஒம்புட்ஸ்மேனின் அதிகாரங்கள்
III. தேர்தல் முறைகள்
IV. 13 ஆம் திருத்தத்தின் அடிப்படைப் பண்புகள்

## பகுதி III

08. சுவிட்சர்லாந்து சமஷ்டி முறையினை விளக்குக

09. முரண்பாட்டை வரைவிலக்கணப்படுத்தி அதன் வகைகளைக் குறிப்பிடுக

10. பின்வரும் தலைப்புகளுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்புகள் எழுதுக

I. ஒற்றையாட்சிக்கும் சமஷ்டி ஆட்சிக்கும் இடையிலான வேறுபாடுகள்.
II. அரச கொள்கைகளும் பணிக்குழு முறைமையும்.
III. சமகால சர்வதேச அரசியலின் பிரதான போக்குகளைக் குறிப்பிட்டு விளக்குக.
IV. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் இயல்பினைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை ஆராய்க.

PTM.Ameen